[1990 ஏப்ரல் 20

ஆதிதிராவிட இன மாணவர்களுக்கு
அகில இந்திய தேர்வுகளுக்குப் பயிற்சி

*4051—திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தைச் சார்ந்த ஆதி திராவிட இன மாணவர் களுக்கு இந்திய ஆட்சிப் பணி போன்ற அகில இந்தியத்தேர்வு களுக்கு மாநில அரசின் செலவில் புதுடெல்லியில் பயிற்சி தரப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு பேரரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பயிற்சித் திட்டம் 1987-ஆம் ஆண்டு வரை மாநில' மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 1989ஆம் ஆண்டு மத்திய அரசின் சிறப்பு உதவித்திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆ. அறிவழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு புது டெல்லியில் பயிற்சி அளிக்கப்படுவதாக அமைச்சர் அறிவித் தார். தற்போது தமிழகத்திலிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்தியப் பணிகளுக்குச் செல்வோரின் எண் ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவது அரசுக்கு நன்கு தெரியும். அந்தச் சூழ்நிலையில் பத்து மாணவர்கள் என்பதைக் குறைந்த அளவு 25 மாணவர்களாகவாவது உயர்த்தி, புது டெல்லியில் ராவ் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற அனுப்பினால், தமிழகத்திலிருந்து இதுபோன்ற பணிகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை உயர வாய்ப்பு உள்ளது. எனவே இதைக் கருத்திற் கொண்டு, பயிற்சிக்கு அனுப்பப்படும் மாண வர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை இப்பயிற்சி நிலையத் திலிருந்து 53 நபர்கள் ஐ.ஏ.எஸ். பயிற்சி மற்றும் அகில இந் தியப் பணிகளில் பயிற்சி பெற்று வந்திருக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நபர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டு மென்று அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. இருந்தபோதி லும், மாணவர்கள் அங்கு சேருவது குறைந்து கொண்டு வரு கின்ற ஒரு சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அரசு தக்க நட வடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 20]

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கு சென்னையில் Free Coaching Centre for I. A. S. Training என்று ஒரு மையம் நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மையத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த, வட மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இங்கு சேர்ந்து படிக்கிறார்கள். அந்த மையத்திலிருந்து சென்ற ஆண்டு தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர்? அதிலும் குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., தேர்வு பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு தலைவரவர்களே, இதுபற்றி விவரமான விடை இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாக அளிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரத்த சேமிப்பு வங்கி

*3366—திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராசிபுரம் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஒன்று ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) இராசிபுரம் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஆரம்பிக்கும் திட்டம் தற்போது இல்லை.

பொறையாறு அரசு மருத்துவ மனை

*3772—திரு. எம். முகமது சித்திக்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறையாறு அரசு மருத்துவமனை நவீனமயமாக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

வரும் ஆண்டுகளில் அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்தும் மருத்துவமனைத் தேவைகளுக்கேற்பவும், இம் மருத்துவ மனையில் புதிய கட்டிடங்கள் கட்டும்போது பரிசீலிக்கப்படும்.